விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, வைகாசி 9 உ. சனி (23-5-70) ற. அவ்வல் பிறை 16 — புத்தகம் 24 இதழ் 44

## தம்பிராசாவின் 'கோட்டை'யை இராசமாணிக்கம் கைப்பற்றினர்!

### மண்முனையில் நடந்த மாபெரும் கூட்டம்!

(பட்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு யூ. என். பி. வேட்பாளர் திரு. எஸ். யூ. தம்பிராசாவின் கோட்டை என்று கூறப்பட்டு வந்த 'மண்முனை' கிராமத்தை இப்போது கைப்பற்றிவிட்டார் திரு. இராசமாணிக்கம் —இதனால் யூ. என். பி. படு தோல்வியடைவதும் இராசமாணிக்கம் வெற்றிபெறுவதும் நிச்சயமான தொன்றுகிவிட்டது,

மண்முனையில் இம்மாதம் 20ந் திகதி திரு. இராச

(4-ம் பக்கம் பார்க்க)

# பொன்னு பொன்னு என்னுச்சு?
# பல்கலைக் கழகம் வந்தாச்சா?

## கொடுத்த வாக்கை நிறைவேற்று! அரசியலிலிருந்து உடன் வெளியேறு!!


### யாழ்ப்பாண தொகுதி மக்கள் கோரிக்கை!

(யாழ். நிருபர்)

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களே! உங்கள் இந்துப்பல்கலைக்கழக வாக்குறுதி என்னவாயிற்று? 1969ம் ஆண்டு முடிவுக்குள் இந்துப் பல்கலைக்கழகம் வந்துவிடும் என்று வட பகுதியில் மேடைமேடையாகத் தம்பட்டம் அடித்து திரிந்தீர்களே! 1969ம் ஆண்டு முடிந்து 1970ம் ஆண்டிலும் நாலரை மாதங்கள் ஓடி முடிந்துவிட்டனவே! உமது வாக்குறுதி என்னவாயிற்று?

யாழ் நகரில் இந்து பல்கலைக்கழகம் நிறுவப்படாவிட்டால் அரசியலைத் துறப்பேன் என்று சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் மாநாட்டில் பெரிதாக வேறு கதை அளந்தீர்களே! யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படவில்லையென்பது இப்போது துலாம்பரமாகி விட்டது. எனவே பகிரங்கமாக கொடுத்த அந்த வாக்குறுதியையாவது காப்பாற்றி அரசியலிலிருந்து ஒதுங்குவீர்களா? இன்றேல்

(4-ம் பக்கம் பார்க்க)


வீரகேசரி
THE VIRAKESARI
THE PREMIER TAMIL DAILY IN CEYLON

காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. எடுத்துள்ள விரதம்

யாழ். நகரில் பல்கலைக் கழகம் இன்றேல் அரசியல் துறவறம்

(தாமோதரம்பிள்ளை அரங்கிலிருந்து எஸ். செல்லத்துரை)

பல்கலைக்கழகத்தின் பேரால் தமிழ காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு சபதம் எடுத்துள்ளார்.

'யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும். இல்லாவிடில் நான் அரசியலைத் துறப்பேன்! இதுதான் அவர் எடுத்துள்ள சபதமாகும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படாவிடின் தாம் அரசியலிலிருந்து வெளியேறிவிடப்போவதாக 22-1-70ல் சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் திரு. பொன்னம்பலம் சபதமெடுத்தார். இது 24-1-70 வீரகேசரியில் முன் பக்க முகப்புச் செய்தியாக வெளிவந்தது. அதன் போட்டோ ஸ்ராட் படமே மேலே காணப்படுவது

## பீட்டரின் விளக்கத்துக்கு சந்திரகாசன் பதில்!

(இளவாலை நிருபர்)

இளவாலையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கூட்டமொன்றில் பேசிய திரு. பீட்டர் கெனமன் தமிழ் மொழி சட்டவிதிகளை தாம் எதிர்த்ததற்கு காரணம், அச்சட்டவிதிகளை யூ.என்.பி.கொண்டு வந்ததாலேயேயன்றி தமிழ் மக்கள் மீதுகொண்ட குரோதத்தாலல்ல என்று கூறியிருந்தார்—

மறுநாள் இதே இடத்தில் நடைபெற்ற தமிழரசுப் பிரசாரக்கூட்டத்தில் பேசிய வழக்குரைஞர் திரு. சி. சந்திரகாசன், "யூ. என். பி. கொண்டு வந்ததால் தான் தமிழ்மொழிச் சட்டவிதிகளை எதிர்த்தோம் என்று கூறும்

(4-ம் பக்கம் பார்க்க)


'I'LL QUIT POLITICS' THREAT BY GGP

JAFFNA, Today

"THE University for the Tamils will be sited in Jaffna and not at Trincomalee as advocated by the Federalists. If not, I shall quit politics."

So declared Mr. G. G. Ponnambalam QC, leader of the All-Ceylon Tamil Congress at a mass rally held at Chavakachcheri last night in connexion with the 26th annual sessions of the party.

He said that as things were he was sure that the University would be sited in Jaffna and a decision in this connexion would be announced by the Government very soon but even at that late stage the FP leaders were trying their best to stop that and have it sited at Trincomalee.

DAILY MIRROR

Hindu varsity by year's end — GGP

CHAVAKACHCHERI, Tuesday.

BEFORE the end of of this year, a Hindu University would be established in Jaffna, said Mr. G. G. Ponnambalam, the leader of the All-Ceylon Tamil Congress at a meeting at Puttur.

Mr. S. Ambalavanar, ... presided.

Mr. Ponnambalam added that there was no hope at all to establish a university at Trincomalee ...

'இவ்வருட முடிவிற்குள் பல்கலைக்கழகம் கிடைக்கும்'

உடுவிலில் ஜி.ஜி.

உடுவில், புதன்

"இராமநாதன் விட்டுச் சென்ற ஏராளமான சொத்துக்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அதி விரைவில் அமைக்கப்படும். நான் கோரிய பல்கலைக் கழகத்துக்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டு விட்டன. பெரும் பாலும் அந்தப் பல்கலைக்கழகம் கிடைக்கும் என்று சொல்லி வைக்க விரும்புகிறேன்." தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம்.பி.யுமான திரு ஜி.ஜி. பொன்னம்பலம் உடுவிலில் நடை... பெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

Virakesari Friday 12th S...

இந்து பல்...

ஜி. ஜி. நக...

1969 முடிவிற்குள் இந்துப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் என்று திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் பல கூட்டங்களில் தமிழ் மக்களுக்கு உறுதிமொழி அளித்திருந்தார். அது இந் நாட்டுத் தினசரிகள் அனைத்திலும் அப்போதைக்கப்போது வெளிவந்தது. ஈழநாடு, சிலோன் டெயிலி மிரர், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் போட்டோ ஸ்ராட் படமே மேலே காணப்படுகிறது.



கந்தையா நடத்திய போர்

கந்தையா இழிவுற்ற தமிழினத்தின்
நிலைகண்டு 'கிழிந்த பழங்
கந்தையா தமிழ்ச் சாதி?' எனக்குமுறி
களங்கண்ட காவலூர்த் தமிழன்...!
சிந்தையா அது...? தமிழுணர்ச்சித் தேன்குன்றம்!
தந்தையா...? ஆம்... செல்வா... அவருக்குமட்டுமே
கந்தையா தொண்டன்!
'தான் தலைவன்' என நினைத்துத் தனிக்கட்சி
துவங்காத தமிழன்!
மான்போல தன்னுடைய கூட்டத்தை
முறிக்காத மாமனிதன்!
சாவுக்குக் கலங்காது தமிழுக்காய் அடிதாங்கி
தீவுக்குத் தனிப்பெருமை சேர்த்த தமிழ் மறவன்!
'சிங்கள் சிறீ' அழித்து
செந்தமிழ் எழுதெழுதி
வெங்களம் ஆடி
வேங்கைபோல் வருகின்றான்!
தமிழரசுக் கோட்டையாம் காவலூர் தந்தவனே!
அமரா! உன் அருங்கொள்கை
அணுவளவும் யாம் மறவோம்!

## பீட்டர் கெனமனிடம் கேள்வி கேட்க வந்த தமிழரசு ஆதரவாளர் வெளியேற்றப்பட்டார்!

### கூட்டத்துக்கு அழைத்துவிட்டு காலித்தனம்!

(மல்லாகம் நிருபர்)

அழைப்பிதழ் மூலம் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட ஒருவர் பண்பற்ற முறையில் கூட்டத்திலிருந்துவெளியேற்றப்பட்டார். இச்சம்பவம் மல்லாகத்தில் 20ந் தேதி நடைபெற்ற காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் நடத்திய இரகசியக் கூட்டமொன்றில் நடைபெற்றது.

கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரு. பீட்டர் கெனமனும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பல ஆதரவாளர்களுக்கு தனித்தனியே வி. பொன்னம்பலத்தினால் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

அழைப்பிதழ் பெற்ற தமிழரசு ஆதரவாளர் பீட்டர் கெனமனிடம் சரமாரியான கேள்விகளைத் தொடுக்க தயாராக அக்கூட்டத்திற்கு சென்றிருந்தார்.

இதை அறிந்த கம்யூனிஸ்டுகள் கதிகலங்கிப் போய் கூட்டத்திற்கு வந்திருந்த அத்தமிழரசு ஆதரவாளரை கூட்டத்திலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்தித்தனராம், அதற்கு அத்தமிழரசு ஆதரவாளர் கொஞ்சமும் அசைந்து கொடுக்காது தமது அழைப்பிதழை காட்டி கூட்டத்திலிருந்து வெளியேறமுடியாதென்று கூறிவிட்டார். இதன்பின் அவரை அங்கிருந்து வெளியேற்றுவதில் வி. பொ. கும்பல் வெற்றி பெற்றுவிட்டதாம், குறித்த நபர் வெளியேறி தெருவீதியில் நின்றபோது, அங்கிருந்தும் சொல்லுமாறு கம்யூனிஸ்ட் காடையர்களால் கட்டாயப்படுத்தப்பட்டார். அதற்கு தெருவீதி உங்கள் சொத்தல்ல என்று கூறி அங்கிருந்து செல்ல தமிழரசு ஆதரவாளர் மறுத்துவிட்டார்.

பின்னர் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கூட்டத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## தினசரிகளின் தில்லுமுல்லு

தேர்தல் நெருங்க நெருங்க, இந்நாட்டுத் தினசரிகள் தமிழரசுக் கட்சி பற்றி நாளாந்தம் புதிது புதிதான கட்டுக் கதைகளையும், பொய்களையும் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து தமிழ் பேசும் மக்களை குழப்பத்திலாழ்த்தும் தமது வழமையான திருவிளையாடலில் இறங்கியிருக்கின்றன.

இடதுசாரி கூட்டணி வேட்பாளர்கள் தமிழ்ப் பகுதியில் தமிழ் பேசும் மக்களிடம் வாக்கு கோரி வேட்பாளர்களை நிறுத்தியிருப்பதைச் சாடி இப்பத்திகளில் ஏப்ரல் 20ம் நாள் நாம் எழுதியிருந்த தலையங்கமொன்றை இருபத்துநான்கு தினங்கள் கழித்து சிலோன் டெயிலி மிறர் முன்பக்க முகப்புச் செய்தியாக—தமிழரசுக் கட்சி இடதுசாரிக் கூட்டணியை எதிர்க்கிறது என்று தலைப்பிட்டு பிரசுரித்திருந்தது. இப்படி டெயிலி மிறர் செய்ததன் அந்தரங்க நோக்கம் சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்களை யூ. என். பிக்கு வாக்களிக்கும்படி தூண்டுவதுதான்.

ஆனல் இதே டெயிலி மிறரும், டைம்ஸ் ஆப் சிலோன் பத்திரிகையும் இம்மாதம் 19ம் திகதி குத்துக்கரணமடித்து இதற்கு எதிரிடையான மற்ருேர் செய்தியையும் முன் பக்கத்தில் வெளியிட்டிருந்தது. இடதுசாரி கூட்டணித் தலைவர்களுடன் தமிழரசுக் கட்சியினர் இரகசிய பேச்சு வார்த்தை நடத்துகிருர்கள் என்ற செய்திதான் அது.

ஏரிக்கரைப் பத்திரிகைகளும் கூட்டுக்கட்சிகளுடன் தமிழரசுக் கட்சி சேர்வது பேராபத்து என்றும், சிங்களப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் இதனை கடுமையாக எதிர்ப்பதாகவும் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து வருகின்றன;

இப்படித் தமிழரசுக் கட்சியைப் பற்றி விதம்விதமான கற்பனைச் செய்திகளை அடுக்கடுக்காக வெளியிட்டு தமிழ் பேசும் மக்களை குழப்பத்திலாழ்த்தி — அதன் மூலம் தமிழரசுக் கட்சியை வீழ்த்தி விட முடியாதா என்ற அங்கலாய்ப்புடன் நாக்கைத் தொங்கப்போட்டபடி காத்திருக்கின்றன இப் பத்திரிகைகள்.

இடதுசாரிக் கூட்டணியுடன் இரகசியப் பேச்சு நடைபெற்றதாக டெயிலி மிறர் வெளியிட்ட செய்தியை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் முற்ருக மறுத்துள்ளார். இது வெறும் கற்பனைச் செய்தி யென்றும், இதுவரை இப்படிப்பட்ட எந்தப் பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லையென்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கூட்டணியை தமிழரசுக் கட்சி கடுமையாக எதிர்ப்பதாக சுதந்திரன் தலையங்கத்தை ஆதாரமாகக் காட்டி செய்தி வெளியிட்ட டெய்லி மிரர், திடீரென்று குத்துக்கரணமடித்து அதற்கு முற்றிலும் மாருன கற்பனைச் செய்தியொன்றை சில நாட்களுக்கிடையில் பிரசுரிக்க முன்வந்ததேன்? இங்குதான் இரகசியம் புதைந்து கிடக்கிறது.

யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் நிலைமை ஆட்டங்கண்டு இருக்கிறது. இம்முறை யாழ்ப்பாணத் தொகுதியை தமிழரசுக்கட்சி கைப்பற்றுவது நிச்சயமாகிவிட்டது. கடந்த தேர்தலில் திரு. பொன்னம்பலத்துக்கு ஆதரவாக நின்ற கத்தோலிக்க மக்கள் அனைவரும் இம்முறை திரு. மார்ட்டினுக்கு ஆதரவாக நிற்கிருர்கள். இந்தச் சூழ்நிலையை உடைத்தெறிந்து—திரு. மார்ட்டினுக்கு இருக்கும் செல்வாக்கை கெடுப்பதற்கும்—பொன்னம்பலத்தை கை தூக்கி விடுவதற்குமே டெய்லி மிறர் இப்படியொரு திருகுதாளச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. இந்த உண்மையை யாழ்ப்பாணத்தொகுதி மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழரசுக்கட்சி தேர்தலுக்குப் பின் யாருடனுவது—எந்தச் சிங்களக்கட்சியுடனுவது கூட்டுச்சேருமா? அப்படியானல் யாருடன் கூட்டுச்சேரும்? அல்லது கூட்டுச்சேராமல் கட்சி தனியே இயங்குவதா? மீண்டும் முன்போல போராட்டப் பாதையில் செல்லுவதா? இவையெல்லாம் தேர்தல் முடிந்தவுடன் இருக்கின்ற சூழ்நிலையை அனுசரித்து தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

பாரதூரமான இவ்விஷயங்களை கட்சியின் ஒரு சில தலைவர்கள் கொழும்பில் கூடி குசுகுசுக்கூட்டம் நடத்தி தீர்மானிக்க முடியாது: அப்படி முடிவு எடுக்கக்கூடாது என்பதே எமது தீர்க்கமான கருத்தாகும்.

இம்முறை பொதுத்தேர்தல் முடிவடைந்தவுடன்—1965ல் ஏற்பட்டதுபோன்ற ஒரு சூழ்நிலை தமிழரசுக்கட்சிக்கு ஏற்படுமானல்—கட்சியின் பொதுச்சபை உடனடியாகக் கூட்டப்பட்டு பொதுச்சபையின் தீர்மானப்படியே கட்சிப் பாராளுமன்றக்குழு செயற்படவேண்டும். கட்சியின் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இது விஷயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து சுறுசுறுப்புடன் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேம்;

**தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களின் அமோக செல்வாக்கைப் பெற்று வெற்றிபெறுவது உறுதியாகி விட்டது, ஈழத்தமிழினத்துக்காக பேசும் ஒரே கட்சியாக தமிழரசுக்கட்சியை இம்முறை தேர்ந்தெடுப்பதென்று வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் முடிவு செய்துவிட்டார்கள். இதனல்தான் தேர்தலுக்குப்பின் கட்சி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையிட்டு பொறுப்புணர்வுடன் இப்போதே சில கருத்துக்களை தெரிவித்துள்ளோம்.**

---

**நல்லூர்த் தொகுதி மக்கள் சிந்தனைக்கு:**

## அருளம்பலத்துக்கு வாக்களிப்பதால் தமிழினத்துக்கு ஏதும் நன்மையுண்டா?

திரு. அருளம்பலம் தேர்தல் வந்ததும் வருவார். தேர்தல் போனதும் அவரும் போய்விடுவார் அருளம்பலம் 1952, 1956 (இரண்டு தேர்தலிலும்) 1965ம் ஆண்டுகளில் ஒழுங்காக தேர்தல்களுக்கு தோன்றியுள்ளார்; 1970ம் ஆண்டுதேர்தலிலும் தோன்றியுள்ளார். 1952, 1956 தேர்தல்களில் திரு. வன்னியசிங்கத்திடமும், 1960, 1965 தேர்தல்களில் திரு. நாகநாதனிடமும் தோல்வியுற்ருர். திரு. அருளம்பலம் கிராமசபை அங்கத்தவராகவும் கிராம சபை தலைவராகவும் இருந்த காலத்தில் தோல்வியுற்ற ஒருவர். இன்று ஒன்று மில்லாத நிலையில் வெல்ல முடியுமா?

**எஸ். எஸ். ஆர்.**

திரு. அருளம்பலம் பல ஆண்டுகள் கொக்குவில், கோண்டாவில் கிராமசபை தலைவராக இருந்தார். இவர் கிராமசபை பகுதிகளுக்கு செய்த நன்மையான திட்டம் யாது? இவர் ஒருவிதமான முன்னேற்றமும் கொக்குவில், கோண்டாவிலுக்கு செய்யவில்லை என்றே சொல்லலாம். இவர் கிராமத்துக்கு கிராமம் பாகுபாடு காட்டி நடந்துள்ளார் என்று மக்கள் பேசிக் கொள்ளுகிருர்கள் இன்று கொக்குவில், கோண்டாவில் அடைந்துள்ள முன்னேற்றங்களை பார்க்கலாம்.

பலகாலமாக மின்சாரம் இன்றி கஷ்டப்பட்ட கோண்டாவில் கிராமத்துக்கு மின்சாரம் கிடைத்தது. திடீர் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பெரிய சந்தை ஒன்று உருவாகியிருக்கின்றது. விவசாயத்துக்கும் கோயில்களுக்கும்மின்சாரம்விஸ்தரிக்கப்பட்டுள்ளது. திரு. அருளம்பலத்தினுடைய காலத்தில்லாத முன்னேற்றங்கள், இன்று புதிய தலைவர் காலத்தில் இடம் பெற்றுள்ளது. இவ்வித்தியாசங்களை கொக்குவில், கோண்டாவில் மக்கள் தெரிந்துள்ளார்கள்.

திரு. அருளம்பலம் கிராம சபை தலைவராக விருந்த காலத்தில், தனது பதவி அதிகாரத்தை பாவித்து கிராம சபை பணத்தை பல விதமாக துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று முன்பு பேசப்பட்டது. கிராம சபைக்கு வந்த பணம் 14 நாட்களுக்குள் வங்கியில் அல்லது கச்சேரியில் கட்டவேண்டும். ஆனல் அருளம்பலம் பல சந்தர்ப்பங்களில்14நாட்களுக்கு மேலும் கிராம சபை பணத்தை வைத்திருந்துள்ளார். ஏன் தான் பணத்தை வைத்திருந்தாரோ? இது கணக்கு பரிசோதனை அதிபரின் குற்றச்சாட்டு.

கிராமசபையில் களவு போய்விட்டதாக தலைவர் தெரிவித்தார். பொலிஸ் இவ் விடயத்தை ஆராய்ந்து. களவுபோனதற்கு ஒருவித ஆதாரமுமில்லை என்று அறிவித்தது. களவு போனதாக சொல்லப்படும் பணத்தை தலைவர் (அருளம்பலம்) கட்டும்படி பணிக்கப்பட்டார். (இதுவும் கணக்குப் பரிசோதகர் அறிக்கை)

1966ம் ஆண்டளவில் கிட்டத்தட்ட பலஆயிரம் ரூபாய்களுக்கு தலைவர் (அருளம்பலம்)கணக்கு காட்டத் தவறிவிட்டாரென்றபிரச்சினையை டாக்டர் என்.எம். பெரேரா பாராளுமன்றத்திலும் கிளப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இவ்விடயம் விசாரணை செய்யப்பட்டு அருளம்பலம் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் நடந்த கிராமசபை தேர்தலிலும் வேட்பாளராக நிற்காது பின் வாங்கிவிட்டார். கிராமசபைத் தலைவரயிருக்கத் தகுதியற்ற ஒருவர், கிராமசபையை நிர்வகிக்க முடியாத ஒருவர், பாராளுமன்றத்துக்கு போக ஆசைப்படுவது ஏன்?

திரு. அருளம்பலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எதிலும் அக்கறை காட்டியது கிடையாது. தமிழரின் உரிமைகளுக்கு குரல் கொடுத்தது கிடையாது. தமிழரின் போராட்டங்களை சாய்மனை கதிரையில் படுத்திருந்து கிண்டல் பண்ணியவர் அருளம்பலம். அருளம்பலத்துக்கு எம். பி. யாக வரவேண்டுமென்ற ஆசையே தவிர தமிழ் மக்களுக்கு சேவை செய்வதிலும், உரிமைகளை மீட்பதிலும் அக்கறை கிடையாது. திரு. அருளம்பலம் போன்றேர் எம். பி, பதவியை துஷ்பிரயோகம் செய்தாலும் அதிசயப்பட ஒன்றுமில்லை.

திரு. பொன்னம்பலம் அருளம்பலத்தை நல்லூர்த் தொகுதிக்கு நிறுத்த விருப்பமில்லாதிருந்தார். யாழ் முஸ்லிம் மையவாடிப் பிரச்சினையில் யாழ் முஸ்லிம் மக்களையும், இந்துப் பல்கலைக்கழகக் கோரிக்கையினல் யாழ் கத்தோலிக்க மக்களையும் பகைத்த பொன்னம்பலம் நல்லூர்த் தொகுதிக்குப் போகவிரும்பினர்; திரு. அருளம்பலம் தான் நல்லூர்த் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர். என்று அறிவித்துவிட்டார். தனக்கு கட்சி நியமனம் தராவிடின், சுயேச்சையாக போட்டியிடுவது நிச்சயம் என்பதைப் பொன்னம்பலத்துக்குசொன்னர். இறுதியில் பொன்னம்பலம் தோற்ருர், அருளம்பலம் வென்ருர்: அருளம்பலம் நல்லூர்த் தொகுதியில் வெற்றி பெறுவதை பொன்னம்பலம் விரும்பவில்லையாம்—அருளம்பலம் தோற்ருல் வரும் தேர்தலில் மகன் குமார் பொன்னம்பலத்தை நிறுத்த திருமதி பொன்னம்பலம் துடிக்கின்ருர்.

நல்லூர்த் தொகுதி மக்கள் மக்களே! தேர்தலுக்கு தேர்தல் நல்லூர்த் தொகுதியை சுற்றி வலம் வருகின்ருர் அருளம்பலம். மே 27ம் திகதியுடன் மேலும் மேலும் தேர்தலுக்கு தேர்தல் நல்லூர்த் தொகுதியை சுற்றித் திரிவதை தடுப்போமா?

---

## பண்டா-செல்வா ஒப்பந்தத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களில் வாழும் தமிழ் மக்கட்கு அரசாங்கத்துடன் தம் தமிழ் மொழியில்கடிதப் போக்குவரத்து செய்வதற்கு வசதி செய்யப்படும் என்ற வசனத்தையும் சுட்டிக் காட்டி தமிழ் மொழியைச் சிங்கள மொழியுடன் சமானமாக நடாத்துவதா என்று வினவுகின்றனர். இந்த உடன்படிக்கைப் பிரகாரம் சிங்களமொழிக்குச் சலுகையும் அபயமும் தேவைப்படும் காலம் வந்ததா என்று குரலெழுப்புகின்றனர்.

### கடைசிக் குறிப்பு

யு. என். பி.யின் 'முதலடி' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசிப் பகுதி மிக முக்கியமானது. அப்பகுதி பின்வருமாறு:-

"மொழியைப் பற்றிய உடன்படிக்கை ஒரு தப்பான அடிப்படை அனுமானத்தில் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது. அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழினத்தின் பரம்பரையான உறைவிடம். அப் பிரதேசத்தில் இன்றைக்கோ வரும் காலத்திலோ தமிழ்மக்களின் தொகைக்கு சமானமான அல்லது கூடுதலான தொகைச் சிங்களவர் வதியக் கூடாது என்ற கருத்து உடன்படிக்கையின் அடிப்படையாக அமைகிறது.

இந்த நிலைமையைப் பிரதமர் பிரதேசத்தைப் பற்றிய உடன்படிக்கையில் தமிழருக்குக் குடியேற்றத் திட்டத்தைப்பற்றியும் பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கியதன் மூலம் பூர்த்திசெய்து கொடுக்கிறார்."

### யார் சொல்வது சரி

சிங்கள இனத்தின் வருங்கால வாழ்வைத் தமிழினத்திற்கு அறுதி செய்து கையளித்துவிட்டதாகவாதித்து பண்டா — செல்வா உடன்படிக்கையைக் கண்டிக்கிறது திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையின் கீழ் இயங்கும் யூ. என். பி. அதே சமயத்தில் தமிழ் காங்கிரசின் ஆயுள் காலத் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் திரு. சி. சுந்தரலிங்கமும் அவ்வுடன்படிக்கை தமிழ் இனத்தை சிங்களவருக்கு விலை கூறி விற்றுவிட்டதாக ஓலமிடுகிருர்கள்.

பண்டா—செல்வா ஒப்பந்தத்தினை எதிர்த்து 1957, 1958ம் ஆண்டுகளில் நாட்டில் சிங்கள இன வெறியை படுவேகமாக கிளப்பிவிட்ட இதே யூ. என். பி. தான் இன்று தமிழ்ப் பகுதியில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரி வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. தமிழரசுத் தலைவருடனேயே போட்டியிடத் துணிந்துவிட்டது—யூ. என். பிக்கு ஆதரவாக கிழக்கில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தாமல் விட்டிருக்கிறது. அதே போல தமிழ் காங்கிரசுக்கு ஆதரவாக வடக்கே யூ. என். பியும் தனது வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

யூ. என். பியையும் யூ. என். பியின் முகமூடி வேடதாரிகளையும் விரட்டியடித்து தமிழரசுக் கட்சியை வெற்றி பெறச்செய்து சுதந்திர உணர்ச்சியை நிலைநாட்டுதல் தமிழினத்தின் முழுமுதல் கடமையாகும்.

எனவே தமிழ்பேசும் மக்களுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் எதிரான இந்நாட்டுத் தினசரிகள்—யூ. என். பி. யையும், தமிழ்க் காங்கிரசையும் பதவிக்குக் கொண்டுவர படாதபாடுபடும் தினசரிகள்—நாளாந்தம் அவிழ்த்துவிடும் பொய் மூட்டைகளை கண்டு தமிழ் பேசும் மக்கள் மனங்கலங்காது—மனமாச்சரியமடையாது — தமிழரசுத் தந்தை செல்வாவின்மீது பூரண நம்பிக்கை வைத்து தங்கள் எதிர் காலத்தை அவரது கரங்களில் விசுவாசத்துடன் ஒப்படைப்பார்களாக!

# பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக யூ. என். பி. கக்கிய சிங்கள இனவெறி!

## 'முதலடி' (FIRSTSTEP) என்ற புத்தகம் இன்றும் பச்சையாக கூறும் உண்மை இது!

## தமிழின விரோத யூ. என். பி.க்கு சரியான பாடம் புகட்டுவீர் மே 27ல்!

பொதுத்தேர்தல் நாள் நெருங்க நெருங்க அகில இலங்கை ஆனைப்பந்திக் காங்கிரஸின் தனிப் பெருந் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு அதிகமதிகம் கிலி பிடித்து வருகிறது. தமக்கு தோல்வி நிச்சயம் என்ற நிலைமையை வெளிக்காட்டக் கூடாது என்ற காரணத்தால்மேடைக்கு மேடை இல்லாததையும் பொல்லாததையும் அடித்து முழக்குரூர்.

முன்பு ஒரு கால் பேசி ஒய்ந்த விஷயத்தை இப்போது புதிதாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டு கூத்தாடினுர். பண்டாரநாயகா —செல்வநாயகம் உடன்படிக்கை உருவாகிக் கருவிலேயே அது மறைந்துவிட்டது. உடன்படிக்கை உதயமாகக் காரணகர்த்தர்களாயிருந்தவாகளுள் ஒருவரான பிரதமர் பண்டாரநாயகா தாமே அந்த உடன்படிக்கை இல்லாதொழித்து விட்டு தாமும் உலக வாழ்க்கையிலிருந்து விடை பெற்றுக் கொண்டார். இந்த நிலையிலும் தனிப் பெருந்தலைவர் தோன்றி மறைந்த உடன்படிக்கை பற்றி ஒப்பாரிவைக்கிருர்.

### ஜீ. ஜீ. கருத்து

சுருக்கமாகச் சொல்வதானுல் பண்டாரநாயகா செல்வநாயகம் உடன்படிக்கை சிங்களவர்களுக்கு சாதகமானது என்பதும் ஜீ. ஜீ. தெரிவித்து வரும் கருத்தாகும். இந்த உடன்படிக்கையைச் செய்துகொண்டதன் மூலம் தமிழரசுக் கட்சி இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் இனத்தை சிங்களவர்களுக்கு காட்டிக்கொடுத்து விட்டது என்று கட்சி மீது குற்றம் சாட்டுகிருர். காட்டிக்கொடுத்தவர் யார்? தமிழ் பேசும் இனத்தின் மானத்தை மந்திரிப் பதவிக்காக விலை கூறி விற்றவர் யார்? அடிமை நிலையை வரவழைத்தவர் யார்? ஜீ. ஜீ. யும் அவர் சிஷ்யகோடிகளும் இல்லையா? அப்படிப்பட்டவர் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவது வேடிக்கைதான். எனினும் வாசகர்களின் விளக்கத்துக்காக உடன்படிக்கை பற்றி ஒரு சில விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

### முதலடி என்ற புத்தகம்

பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாட்களில் யு. என். பி.யினரால் ஒரு சிறு புத்தகம் பிரசுரிக்கப்பட்டு சிங்கள மக்களிடையே ஏராளமாக விநியோகிக்கப்பட்டது. புத்தகத்தின் பெயர் "முதலடி" (FIRST STEP)

புத்தகத்தின் மேலட்டை இங்கு படம் பிடித்து வெளியிடப்பட்டிருக்கிறது.



யூ, என். பி. 1957-ல் வெளியிட்ட 'முதலடி' என்ற நூலின் அட்டைப் படம் இதுதான்.

இப்பிரசுரத்தின் நோக்கம் பண்டாரநாயகா— செல்வநாயகம் ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமைந்து விட்டது என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களைத் தூண்டிவிடுவதாகும். மற்றும் ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதை எந்த விதத்திலும் தடுத்துவிட வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் யு. என். பி.யினர்.

புத்தகத்தில் உள்ள படம்.

"Every home should hang upthis map andnot take it down, untilthe Bandaranayake Chelvanayakam Pact is abrogated."

## "பண்டா-செல்வா ஒப்பந்தம் சிங்களம் மட்டும் சட்டத்தைப் புதைகுழிக்கு அனுப்பியது"

அதாவது "ஒவ்வொரு குடும்பமும் இந்தப் படத்தை தங்கள் வீட்டில் தொங்கவிடவேண்டும்; பண்டாரநாயகா—செல்வ நாயகம் உடன்படிக்கை அழிக்கப்படும் வரை அப்படத்தை கீழேயிறக்கக் கூடாது." என்று கூறும் வாக்கியம் பிரசுரத்தில் தரப்பட்ட இலங்கைப் படத்தின் அடியில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

உடன்படிக்கை இலங்கையில் தமிழரசை நிறுவுந் திட்டத்தின் முதலடி எனச் சிங்கள இனத்திற்கு எச்சரிக்கை விடுவதாக அமைந்தது. பிரசுரத்தில் தரப்பட்ட படம், அதாவது கூடார்த்தச் சித்திரம். தமிழரசுக் கட்சி முதலடி வைத்து இலங்கையின் பெரும் பாகத்தைத் தனதாக்கிக்கொண்டது; மற்ற அடியும் வைத்தால் இலங்கை பூராவையுமே சொந்தமாக்கிக்கொள்ளும், என்பது கூடார்த்தச் சித்திரத்தின் பொருள்.

### பிரதேச சபைகள்

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இரண்டு முக்கிய அம்சங்களை எடுத்து அவற்றிற்கு வியாக்கியானம் கொடுத்து நன்கு கண்ணில் படத்தக்கவாறு புத்தகத்தில் பிரசுரித்திருக்கிறது யூ. என். பி. அந்த இரண்டு அம்சங்களில் ஒன்று பிரதேச சபைகளிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறப்படும் விசேஷ அதிகாரங்கள்; மற்றது குடியேற்றத்திட்டம் பற்றிய ஒழுங்குகள். இன்னும், தமிழ் மொழிக்கு இவ்வுடன்படிக்கைப் பிரகாரம் அளிக்கப்படவிருந்த அந்தஸ்து பற்றியும் யு. என். பி. தனது பிரசுரத்தில் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

பிரதேச சபைகளின் விசேட அதிகாரங்கள் பற்றி யு. என். பி. தனது பிரசுரத்தில் தெரிவித்துள்ள கருத்து "இது சமஷ்டி முறையான ஒரு இராஜ்யத்துக்கான ஏற்பாடல்லவா?" என்பதாகும்.

### குடியேற்றத் திட்டம்

பிரதேச சபைகளின் அதிகாரத்துள் அடங்கும் குடியேற்றத்திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் சுமார் 10 இலட்சம் ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள வேளாண்மைப் பூமி தமிழர்களுக்கு உடன்படிக்கை மூலம் கையளிக்கப்படுகிறது என்று எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்த உடன்படிக்கை அமுல் செய்யப்படின் சிங்கள இனம் தனது 'பரம்பரைச் சோற்றுப் பானையையே தமிழர்களிடம் கொடுத்துவிடடதாக' முடியும் என்று கவலை தெரிவித்திருக்கிறது யு. என். பி.

### கைத்தொழில் வளம்

கைத்தொழில் வளங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தேசியச் சொத்தான வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை, கல்ஓயா, கந்தளாய் ஆகிய இடங்களில் சீனி செய்வதற்கான ஸ்தாபனங்கள், கிளிநொச்சியிலுள்ள டி. டி. ரி.யும் சோடாவும் உற்பத்தி செய்யும் ஆலைகள், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஆனையிறவு உப்பு உற்பத்திக்களம் புல்மோட்டை இல்மெனைற் தொழிற்சாலை மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன் பிடித்துறைகள் யாவும் தமிழருக்கு சொந்தமாகின்றனவென்று சிங்கள இனம் எச்சரிக்கப்படுகின்றது

### தமிழ் மொழி அந்தஸ்து

தமிழ் மொழிக்கு இவ்வுடன்படிக்கைப்படி கொடுக்கப்பட இருந்த அந்தஸ்தைப் பற்றி பின்வரும் கருத்துகளை யூ. என். பி. யினர் தம் பிரசுரத்தில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

(1) இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மையினத்தின் மொழி தமிழ்மொழி என்பதை அரசாங்கம் அங்கீகரித்து விட்டது.


(2) அம்மொழி தமிழ்ப் பிரதேசங்களின் அரசாங்க நிர்வாக மொழி என்று நிர்மாணித்ததன் மூலம் இலங்கையில் ஓர் பாகம் அம்மொழிக்குத் தன் சொந்த உறைவிடமாக்கப்பட்டிருக்கிறது.

(3) தமிழ்ப்பிரதேசங்களில் வாழும் சிங்களவர்கட்கு அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்துச் செய்யும் வகையில் தம் சிங்கள மொழியை உபயோகிக்க வசதி செய்யப்படும் என்ற வசனத்தையும் சிங்களப் பிர

(2-ம் பக்கம் பார்க்க)

தமிழரசுப் படைவீரர் வரிசை(13)

### தமிழரசுத் தலைவர் சி. மூ. இராசமாணிக்கம்



இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் துயர் துடைப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்டது தமிழரசுக்கட்சி. அடுக்கடுக்காக இன்னல்களை ஏற்று அல்லலுற்ற இலங்கை தமிழ்பேசும இனத்தின் மீட்சிக்கு வழிகோலக் கூடியது அறப்போரே என்று கொள்ளப்பட்ட சமயம் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று கட்சியை நிதானத்தோடு வழிநடத்தியவர் திரு, சி. மூ. இராசமாணிக்கம் அவர்களே. அவரே கட்சியின் தற்போதைய தலைவராகவும் திகழுகிருர்.

இவர் கிழக்குமாகாணத்திலுள்ள மண்டுரைப் பிறந்த ஊராகக் கொண்டவர். பொருளாதாரத்துறையில் பி. ஏ. பட்டம் பெற்ற சொற்பபேரில் இவரும் ஒருவர் என்ற பெருமை பெற்றவர். இவரின் திறமையைக் கண்ட அரசாங்கம் நில அதிகாரியாகவும், பின்னர் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாகவும் நியமித்தது.

1947ல் அரசியலிற் புகுந்தார். 1952 பொதுத்தேர்தலிற்ருன் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றுர். 1960ல் நடந்த இருதேர்தல்களிலும்1965 பொதுத்தோதலிலும் மிக அதிகப்படியான வாக்குகளால் பட்டிருப்பு இவரைத் தெரிவு செய்தது. தன் காலத்தில் திரு. இராசமாணிக்கம் அவர்கள் பட்டிருப்பு மக்களின் நன்மைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் ஒவ்வொரு தடவையும் பாராளுமன்றத்தில் வாதாடியிருக்கின்ருர். இவரின் சிறந்த சேவையால் பட்டிருப்புத்தொகுதி பல முற்போக்கான நன்மைகளை அடைந்திருக்கிறது.


திரு. இராசமாணிக்கம் அவர்கள் கட்சியின் பல போராட்டங்களிலெல்லாம் முன்னின்று இன்னல் பல அனுபவித்தவர், அதனுல் அவரை ஏகமனதாகத் தலைவராக்கியது கட்சி.

ஆற்றலும் அறிவும் அனுபவமுமிக்க இவர் பட்டிருப்புக்கு ஆற்ற வேண்டிய பணி இன்னும் ஏராளமிருக்கிறது. அந்தச் சீரிய சேவைகளுக்கான விரிவான திட்டங்கள் இவரிடமிருக்கின்றன என்பதால் மக்கள் இவரையே இம்முறையும் தம் பிரதிநிதியாக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# தமிழர்கள் 'நாய்'களா?




குணசேனு நிறுவனத்திலிருந்து வெளிவரும்சிங்கள தமிழ் ஆங்கில ஏடுகள் இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களை எவ்வளவு தூரம் இழித்துப் பழித்து ஏசி இகழ்ந்து வருகின்றன என்பதற்கு இதோ மற்ருேர் எடுத்துக்காட்டு. மேலே காணப்படும் கூடார்த்த சித்திரம் மே 16ந்திகதி தினபதியில் வெளிவந்ததாகும். இதில் செல்வாவின் முகத்தை 'கிராமபோன்' குழாயாகப் போட்டு தமிழ் அழியப் போகிறது. பிரதேசம் பறி போகிறது: உரிமை ஒழிகிறது என்று 20 வருடத்துப் பழைய பல்லவியைப் பாடுவதாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. எதிரே உட்கார்ந்திருப்பது யார்? நன்ருகப் பாருங்கள். நாய்கள் உருவில் மனிதர்கள்,

இந்த மனிதர்கள் யார்? இவர்கள் தமிழர்கள்: ஆம், 20 ஆண்டுகளாக செல்வாவின் பேச்சைக் கேட்டு வரும் இலட்சக் கணக்கான பச்சைத்தமிழர்கள். இத்தமிழ்க்குலத்தினரைத்தான் நாய்களாக படம் போட்டுக் காட்டியிருக்கிருர் தினபதியார்—தமிழினத்தை நாய்கள் என்று இகழ்ந்துகொண்டே தமிழர்களிடம் வியாபாரத்தை நடத்துகிறது இச்சிங்கள முதலாளித்துவ ஸ்தாபனம்:

தமிழ் மக்களே! உங்களுக்கு மானம் ரோசம் கொஞ்சமாவது இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கிருர் தினபதியார்.

இதற்கு உங்கள் பதில் என்ன? தினபதியை இனி மேலும் கையால் தொடுவீர்களா?

செல்வாவின் பேச்சைக் கேட்போர் நாய்களாம். இப்படிக்கூறும் தினபதியாரும் செல்வாவின் பேச்சுக் கேட்டு அதன்படி பல ஆண்டுகாலம் ஒழுகிய ஒரு பழைய ''நாய்'' தான் என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை—

தினபதியில் வேலைசெய்யும் சோற்று நாய்களே! உங்களுக்கு நன்றியில்லாமற் போனாலும் தமிழ் பேசும் மக்கள் செல்வாவின் தன்னலமற்ற தொண்டை என்றுமே மறவாதநன்றியுள்ளம்படைத்தவர்கள் தான்—இதைமறவாதீர்கள். இப் பொதுத் தேர்தல் இதை உணர்த்தத்தான் போகிறது.

# பொன்னு பொன்னு என்னுச்சு?....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மே 27ல் யாழ்ப்பாணத் தொகுதி மக்களால் ஒதுக்கப்படும்வரை காத்திருக்கப் போகிறீர்களா?

இவ்வாறு கொதிப்புடன் பொன்னம்பலத்தை நோக்கி கேட்டிருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தொகுதி தமிழ் மக்கள் திரு. பொன்னம்பலத்துக்கு நூற்றுக்கணக்கானேர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கேட்டிருக்கின்றனர்.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து 1969 ஏப்ரலில் வெளியேறியபின்னர் நீங்கள் ஏன் அரசுடன் ஒட்டியிருக்கிறீர்கள் என்று தமிழ மக்கள் கேட்ட கேள்விக்கு சில கோரிக்கைகளைப் பெறவே ஒட்டியிருப்பதாகவும் அதில் ஒன்று இந்துப் பல்கலைக் கழகம் என்றும் கூறிவந்தீர்கள். உங்கள் கூற்று இந்நாட்டிலுள்ள, சகல பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அது மட்டுமன்றி 1969 முடிவிற்குள் இந்துப்பல்கலைக் கழகம் வந்துவிடுமென மேடைக்கு மேடை முழங்கி வந்தீர்கள். உங்களது இப்பேச்சுக்களும் இந்நாட்டு தினசரிகள் அனைத்திலும் வெளிவந்திருக்கின்றன. அப்பேச்சுக்களின் தொகுப்பு ஒன்றையும் இத்துடன் அனுப்பியுள்ளோம்

இதற்கிடையில் 22-1-70ல் சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் மாநாட்டிலும் யாழ் நகரில் இந்துப் பல்கலைக் கழகம் நிறுவப்படாவிட்டால் அரசியலைத் துறக்கப்போவதாகவும் வீரசபதம் எடுத்தீர்கள். அதுவும் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்திருக்கிறது. நீங்கள் மறந்திருந்தாலும் அச்செய்திவந்த 'வீரகேசரி' பத்திரிகைப் பிரதியொன்றும் இத்துடன் அனுப்புகிருேம்.

நீங்கள் கூறியதுபோல இந்துப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரவில்லை—இனிவரும் சாத்தியமும் இல்லை—எனவே நீங்கள் கொடுத்த முதல் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டீர்கள். ஆகவே தயவுகூர்ந்து இரண்டாவது வாக்குறுதியையாவது - அதாவது யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம் வராவிட்டால் அரசியலைத் துறப்பேன் என்று வாக்குறுதியையாவது தாமதமின்றி நிறைவேற்றுங்கள். ஏனெனில் நீங்கள் அரசியலைத் துறந்தாலென்ன—துறக்காவிட்டாலென்ன, அரசியலிலிருந்து உங்களைத் துரத்த யாழ் மக்கள் முடிவு செய்துவிட்டார்கள். எனவே அதற்கு முன்னர் நீங்களாக அரசியலைத் துறந்துவிடுவது நல்லதல்லவா? பொன்னம்பலம் வாக்குறுதியைக் காப்பாற்றினர் என்ற பெயராவது மிஞ்சுமே! உங்களில் கொண்டுள்ள பற்றுல் பாசத்தால் தான் இப்படிக் கூறுகிருேம்—எனவே உடன் வெளியேறுங்கள் அரசியலிலிருந்து—இல்லாவிடில் நிச்சயமாக வெளியேற்றப்படுவீர்கள்.

என்னை அனுப்புங்கள்—ஒரு வருடத்தில், ஆறு மாதத்தில் இந்துப் பல்கலைக் கழகம் கொண்டுவருகிறேன் என்று இப்போது பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்த ஏமாற்றுப் பேச்சுக்கள் இனிச் செல்லாது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

—இவ்வாறு அந்த மகஜர் கூறுகிறது.

தமிழரசு படைவீரர் வரிசை 14

## செயல் வீரர் சி. எக்ஸ். மார்டின்



தமிழரசுக் கட்சியின் பாகுபாடற்ற இலட்சியங்களையும், எதிர்காலத் திட்டங்களையும், சமஷ்டிக் கொள்கையின் நன்மைகளையும் பூரணமாக அறிந்த எந்த அறிஞரும் அவற்றை ஏற்றுக்கொள்ளவே செய்வர். அதனுல் தான் தமிழரசுக்கட்சியின் அரசியல் திட்டங்களையும், போராட்ட வரலாற்றையும் அறிந்து அதனுல் ஈர்க்கப்பட்டுத் தமிழரசுக் கட்சிக்கு வந்தவர் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அவர்கள்.

இவர் மிகச்சிறந்த கல்விமான்: நீதிபதியாகக் கடமையாற்றியவர்.

யாழ்நகரில் இவரைத் தெரியாதவர்களே இல்லை எனலாம். இவரை குருநகர், கொழும்புத்துறை மக்களெல்லாம் தமது மானசீகத் தலைவராகக் கொண்டுவிட்டனர்.

திரு. மசர்ட்டின் அவர்கள் எல்லோரும் ஓர் குலம், எல்லேரும் ஓரினம் என்றகொள்கைபடைத்தவர். தமிழன் தனக்குள் பலவிதமான கோஷ்டிகளுக்குள்ளாகிப் பலமற்றுப் போய்விடக் கூடாது என்ற நல்லெண்ணம் படைத்தவர். தமிழர்களிடையே தாழ்த்தப்பட்டோர் என்றே ஒரு வகுப்பார் கிடையாது என்பவர். அதனுல்தான் கற்ருேரும், மற்ருேரும், பெரியோரும் இளைஞர்களும் இவரை ஆதரிக்கின்றனர்.

1965 பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட போது தமிழரசுக்கட்சியின் செல்வாக்கை யாழ் நகரில் மிக உயர்ந்த நிலைக்கு ஏற்றிய பெருமை திரு. மார்டினையே சாரும்.

இவரின் அறிவு நுணுக்கத்தையும், பொதுபபணிக்குரிய, ஆற்றலையும் இவரது'மார்டின் அறிக்கை' துலாம்பரமாகக் காட்டிற்று. அந்த அறிக்கையினுல் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா மககளுக்கும் சம சந்தர்ப்பமும், சம பலமும்' சம சலுகைகளும், சம உரிமையும் கிடைத்தன!

சிறுபான்மை மக்களுக்கு மார்டின் அறிக்கை ஒரு வரப்பிரசாதம். அதை திரு. ஜி. ஜி. யையே புறமுதுகிடச்செய்து வென்றவர் திரு. மார்டின்.

இத்தேர்தலிலும் இவர் எல்லாரையும் முறியடித்து வாகை சூடப்போகிருர் என்பதை இவருக்குச் சேர்கின்ற மக்கள் கூட்டமே அறிவிக்கின்றது.

## தம்பிராசாவின் கோட்டையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கத்தை ஆதரித்து மிகப் பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. பல ஆயிரக்கணக்கானேர் திரண்டு வந்திருந்த இக்கூட்டம் இராசமாணிக்கத்தின் வெற்றியை ஸ்திரப்படுத்துவதாயமைந்தது.

இக்கூட்டத்தில் திரு. இராசமாணிக்கம், உணர்ச்சிகரமாக உரை நிகழ்த்திஞர். அவர் பேசுகையில் கூறியதாவது;—

இத்தொகுதியின் நலனுக்காக, என்னுல் எவ்வளவோ சேவைகள், அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டிருப்பதை இலகுவில் எவரும் மறந்திருக்கமுடியாது, எனது தொகுதியின் முன்னேற்றம் கருதியே நான் உழைத்துள்ளேன். இதை மறந்து எதையெல்லாமோ பேசுபவர்களுக்காக நான் வேதனைப்படுகிறேன். காலப்போக்கில் அவர்களெல்லாம் திருந்திவிடுவார்களென எதிர்பார்க்கிறேன்—

உறுதியான கொள்கையோடு, உரம்பாய்ந்த நெஞ்சத்தோடு, மரியாதைக்காகவும். மானத்துக்காகவும், இனவுரிமை, மொழியுரிமை, குடியுரிமை ஆகியவற்றிற்காக அயராது போராடி வருவது தான் நான் சார்ந்துள்ள இயக்கம் தமிழரசுக்கட்சி என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மக்களைபிளவுபடுத்தி, நான் தேர்தலில் தோல்வியடைய வேண்டுமென கங்கணம் கட்டி எனக்கெதிராகப் பல சூழ்ச்சிகளைச் செய்ய முனையும் மாற்றுக்கட்சியினருக்கு எதிர் வரும் 27ல் தகுந்த பாடம் புகட்ட பொது மக்கள் தயாராகவிருக்கின்றனர் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 1965ம் ஆண்டில் என்னை இத்தொகுதி பிரதிநிதியாக தெரிந்தனுப்பிய நீங்கள் இம்முறையும் தெரிவு செய்தனுப்பி தொடர்ந்து இத்தொகுதிக்கு சேவை செய்ய என்னை ஆதரிக்கும்படி வேண்டுகிறேன்.

இக்கூட்டத்தைக் குழப்பும் நோக்குடன் வந்திருந்த யானைக் கட்சியின் கூலிப் படைகள், மக்கள் சக்தி இராசமாணிக்கத்தின் பக்கம் இருப்பதறிந்து 'நைசாக' அங்கிருந்து நழுவினர்.

பட்டிருப்பில் திரு. இராசமாணிக்கம் வெற்றி பெறுவது இக்கூட்டத்தில் மக்கள் காட்டிய ஆதரவுடன் நிச்சயமாகிவிட்டது. ஆனை அலறிப் புடைத்து மே 27ல் ஒடுவது உறுதி என்று மக்கள் பேசிக் கொள்ளுகிருர்கள்.

## கொடிகாமத்தில் கேள்வி—பதில் கூட்டம்!

(சாவகச்சேரி நிருபர்)

இன்று மாலை மூன்று மணிக்கு கொடிகாமம் சந்தியில் தமிழரசுக் கட்சியின் ஆதரவில் கேள்வி பதில் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. இதுவரை திரு. வி. என். நவரத்தினத்தை நோக்கி விடுக்கப்பட்ட சகல கேள்விகளுக்கும் இப்பகிரங்கக் கூட்டத்தில் பதில் சொல்லப்படும். கூட்டத்தில் திரு. வி. நவரத்தினம், மு. ஆலாலசுந்தரம், ஜனுப் முத்துராசா அவர்கள் கேள்விகளுக்கு விடை அளிப்பார்கள்.

## பீட்டரின்விளக்கத்துக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீட்டர் கெனமன் நாளை யூ. என். பி. அரசாங்கம் இரண்டு கொத்து அரிசியை கூப்பனுக்கு வழங்க முன்வந்தால் அதையும் எதிர்ப்பாரோ இந்தப் பீட்டர் கெனமன்? யூ.என். பியோ வேறுயாரோ செய்யும் எந்த நன்மையான காரியத்தையும் யாரும் ஆதரிக்கத்தான் வேண்டும்—தமிழ் மக்களிடத்தில் உண்மையான பற்று பீட்டர் கெனமனுக்கு இருந்திருந்தால், தமிழ் மொழிச்சட்ட விதிகளை அவர் நிச்சயம் ஆதரித்திருக்கவேண்டும்'' என்று பலத்த கரகோஷத்திடையே கூறிஞர்.

## பீட்டர் கெனமனிடம்...

(1-ம் பக்கத்; தொடர்ச்சி)

தோசை வடை என்று தமிழ் மக்களை தனது கட்சி ஒரு போதும்கிண்டல் பேசவில்லையென்றும் இன்னும் ஏதேதோவெல்லாம் பிதற்றிஞராம் திரு. பீட்டர் கெனமன்—கேள்விகேட்கவாயற்ற வி. பொ. வின் வால்களுக்கு முன்னுல்!

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேபபர்ஸ லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்,